உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் ௰௯ | சுபானு—ஐப்பசி 1943—அக்டோபர் | மலர் எ |


## பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

### சங்க நிகழ்ச்சிகள்

#### விரிவுரைக்கூட்டம்

நாளிது சுபானு புரட்டாசி ௰௧-ஆம் நாள் திங்கள் மாலை 7 மணிக்கு, இச் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில், சிவபந்து, திரு. T. S. ஸ்ரீபால் அவர்கள் "சைவமும் சமணமும், என்னுந் தலைப்பில், சங்ககாலத்து இவ்விரண்டு சமயங்களும் வேறுபாடின்றி வழங்கியிருந்தனவென்று அவைகளின் கோட்பாடுகளின் ஒற்றுமைகளை எடுத்து விளக்கி, இடைக்காலத்துச் சைவத்தில் காபாலிகம் கலந்து பழஞ்சைவநெறிக்கு முரணியிருந்ததென்று கூறி, இராமலிங்கவள்ளலார் விளக்கிய சைவத்தைப் பாராட்டி, அவர்காட்டிய வழியொழுகலே சாலுமென முடித்து இங்ஙனம் சிறந்ததோர் விரிவுரை இயற்றினர்.

பின்னர், சங்க அமைச்சர் அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிது நிறைவுற்றது.

#### கலைமகள் விழா

சுபானு புரட்டாசி ௰௩-ஆம் நாள் புதன்முதல் தொடர்ந்து பத்துநாட்கள் இவ்விழா இனிது நிகழ்ந்தது. நிகழ்ச்சி நிரலில் குறித்தமுறையே சங்க அன்பர்களாகிய அறிஞர்கள், பழந் தமிழ்ப் புலவர் பெருமக்களைப் பொருளாகக் கொண்டு அரிய விரிவுரை யாற்றினர்கள். ஆரும்நாள் விழாவன்று, தமிழ்ப் பெரும் புலவர், இராவ்சாகிபு, மு. இராகவையங்கார் அவர்கள் தமிழ்க்கலைமகள் எனும் தலைப்பில் அரிய உரைவிருந்தளித்தார்.

## இசைவிருந்து

சுபானு புரட்டாசி உச-ஆம் நாள் ஞாயிறு மாலை 6 மணிக்கு, சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் தஞ்சை நகராண்மைக் கழகத் தலைவர், திருவாளர். இராவ்பகதூர், A. Y. அருளானந்த சாமி நாடார் அவர்கள் தலைமையில், இசையரசு, தருமையாதீன இசைத்தமிழ்ப் புலவர் திரு. M. M. தண்டபாணிதேசிகர் அவர்கள் செந்தமிழ் இன்னிசை வழங்கினுர்கள். சங்கம் இசையரசிற்கு இன்னியல் வாழ்த்துரை வழங்கியது. நாடார் அவர்கள் பின் வரும் இனிய முடிவுரை கூறினுர்கள்.

அன்பு நிறைந்த பெரியோர்களே, இன்று இந்த இன்னிசை விழாவிற்குத் தலைமை தாங்க என்னை அழைத்துப் பெருமை படுத்தியதற்காக, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினருக்கு என் உள முவந்த நன்றியைச் செலுத்துகின்றேன். இச் சங்கம் ஆற்றும் உயரிய நிகழ்ச்சிகளில் நாம் பங்கெடுத்துக் கொள்வது மகிழ்ச்சியும் பெருமையும் வாய்ந்த செயலாகும். தொன்று தொட்டே நாகரிகத்திற்கும் கலைகளுக்கும் அடிப்படையாகத் திகழ்ந்த மரபினரின் மொழிகளில் முதன்மை பெற்றுத் தாயெனத்தலை சிறந்து விளங்குவது தமிழ்மொழி. அம்மொழியின் சிறப்பிற்கும் வளர்ச்சிக்கும் புத்துயிர் அளிக்க முனைந்து தொண்டாற்றும் கழகங்களில், முதன்மையானது நமது கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும்.

ஒரு கூட்டத்தாரின் உயிர்போன்றது அவர்களின் நாகரிகம். அந்த நாகரிகத்தின் உயிர்போன்றது அவர்களின் கலைகள். கலைகளின் வளம் அடிப்படையாக நூல்களில் வேரூன்றிக் கிடக்கின்றது. நூல்களின் பயனுக்கும் வளர்ச்சிக்கும் மொழியின் வளம் உயிர்நிலை போன்றிருக்கின்றது. ஆதலின் நூல்களை எளிதிற் பயின்று அவைகளின் கலைச் செல்வத்தைப் பயன் படுத்தக் கூடியவாறு, எந்த அளவில், ஒருமொழி செம்மையான நிலையில் வழங்குகின்றதோ அவ்வளவிற்கு, அந்த நூல்கள் புகட்டும் பழங்கலைகளும் நாகரிகமும், மக்களுக்கு நன்மையியற்றவும் வருங்காலத்தில் மக்களிற் பலர் புதியநூல்களியற்றிக்கலைகளை பெருக்கவும் செய்யும். நூலளவே யாகுமாம் நுண்ணறிவு என்பதைப் போன்றே வழங்கும் மொழியளவே யாகும் மக்களின் நுண்ணறிவு என்பதும் வெளிப்படை, மொழியிழிந்த காலத்தில் அதில் பொதிந்திருக்கும் நூல்களும் கலைகளும் நாகரிகமும் குன்றிப்போகும் என்பது எளிதிற் புலனுகும். ஆதலின் அரசியற் காரணங்களாலும் வகுப்புவேறுபாடுகளாலும், நிலை குன்றிப் பிறமொழிகளாம் களையடர்ந்து கலப்பு மொழியாய்

வழங்கும் தமிழ் மொழியின் குறைகளைப் போக்கி அந்த இனிய மொழியைக் கைதூக்கி பழைய உயர்நிலைக்குக் கொணர்ந்து நம் மக்களெல்லாம் எளிதில் அரிய தமிழ்க் காவியங்களைப் படித்தறிந்து நலம்பெறச் செய்வதில் இந்தக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெருந்தொண்டு ஆற்றிவருகிறது. இந்தச் சங்கத்திற்காக நிதி திரட்டுவதில் தமிழ் மக்கள் யாவரும் துணைபுரிவது பெருங் கடமையாகும். பெருமைவாய்ந்த இப் பெருங்கடமையை ஆர்வத்துடன் ஏற்று இந்த உயரிய தொண்டில் ஈடுபட்டு இப்பொழுது நமக்கு இன்னிசை விருந்தளித்த இசையரசு தருமையாதீன இசைத் தமிழ்ப் புலவர் திருவாளர் மு. மு. தண்டபாணிதேசிகர் அவர்களுக்கு நமது நன்றி மிக்க உரித்தாகும். அவர்கள் இசைத் திறனும் பேசும் படக்காட்சியில் நடித்த நடிப்பின் புகழும் தமிழ்நாடு முழுதும் நிலவுகின்றன. அவர்கள் ஆற்றிய தேன் சுவை இசைப் பொழிவைக் கேட்டு நாம் உளமகிழ்ந்தோம். தமிழ்த் தாயின் மாண்பு நிறைந்த புதல்வரில் ஒருவரான பட்டினத்தாரின் வரலாற்றை வெகு அழகாக நடித்த திருவாளர் தேசிகர் அவர்கள் தாய்மொழித் தொண்டில் ஈடுபட்டது மிகவும் சிறப்பாகும். தமிழ்த்தாய்க்கு உரிய பெருந்தொண்டைத் தமிழ் இசைமகள் போன்று சிறந்தோங்கச் செய்வதைக் காணும் காட்சி மிக்க இன்புறக் கூடியதே. தமிழ் மொழியும் தமிழ் இசையும் மேன்மேலும் முன்னேறி நமது தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு உயரிய இன்பத்தையும் சிறப்பையும் அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி என் சிற்றுரையை முடித்துக்கொள்ளவதோடு என்னை இந்த இன்னிசை விழாவிற்கு தலைமை தாங்கும்படி அழைத்ததற்காக மறுமுறையும் என் மனமார்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பின், கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர் நாவலர் அவர்கள் இசையின் பெருமையினை இயம்பி கல்லூரி வளர்ச்சியில் கருத்துடையராய் இசைவிருந்தினை வழங்கிய தேசிகர் அவர்களையும் தலைமைதாங்கிய நாடார் அவர்களையும் பாராட்டிப் பேசினர். இசைவிருந்து இரவு ஒன்பதரை மணிவரை நிகழ்ந்தது. பின்னர் சங்க அமைச்சர் அவர்கள் இசையமுதூட்டிய தேசிகர்க்கும் ஆதரவளித்து மன்றிற்குழுமிச் சிறப்பித்த அன்பர்கட்கும் நன்றி கூற, இசைவிருந்தினிதே நிறைவேறியது.

அன்பர்கள் கட்டணமாகவுதவிய 692 வெண்பொற் காசுகளும் புலவர் கல்லூரி நிதியாகச் சேர்க்கப்பெற்றுளது.

# வெள்ளிவீதியார்

உழவன்

இந் நல்லிசைப் புலமை மெல்லியலார் மதுரைமா நகரில் வெள்ளியம்பலத் தெருவில் வாழ்ந்து, அதன் காரணமாக இப் பெயர் பெற்றனரோ என நற்றிணை உரையாசிரியர் ஐயுறுகின்றார். உலகவழக்கிலும் ஒருவர் வாழ்கின்ற ஊரின் பெயராலோ, இடத்தின் பெயராலோ பெயர் சுட்டப்படுதலுண்டு. நூல் வழக்கிலும் எடுத்துக்காட்டாகத் திருவாய்மொழிக்கு உரை வகுத்த பலருள், ஈடு முப்பத்தாறுயிரம் செய்தவர் பெயர் வடக்குத் திருவீதிப்பிள்ளை என்றிருத்தல் காண்க. வானநூற் புலமையிற் சிறந்தாராகி, வெள்ளியென்னுங் கோள் சுழலும் வழியினை ஆய்ந்து கூறியதன் காரணமாக, இவர் இப்பெயர் பெற்றவராவரென்பாருமுளர். இவர்க்கிப்பெயர் அமைந்தமைக்கு வேறு எக்காரணமும் புலப்பட்டிலது.

இவர் அகம் 45ல் "ஆதிமந்திபோலப்பேதுற்று — அலந்தனன் உழல்வேன் கொல்லோ" எனக்கூறி யிருத்தலின், ஆதிமந்திக்குப் பின்னும், அகம் 147ல் "வெள்ளிவீதியைப் போல நன்றும்—செலவயர்ந்திசினுல்யானே" என ஒளவை கூறியிருத்தலின் அவருக்கு முன்னும் உள்ள காலத்தவராவர். இவர்கட்கு ஒரு காலத்தினருமாகலாம். ஒளவை தொண்டைமான் இளந்திரையன் காலத்தவரென்றும், இளந்திரையன் காலம் கி. பி. முதல் நூற்றுண்டின் இடைப் பகுதி என்றுங் கூறுப. ஆதலின் இவரும் அந்நூற்றுண்டிற்கு முன் அல்லது அக்காலத்து வாழ்ந்தவர் ஆவர்.

இவரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் வேறெவையுங் கிடைத்தில. இவரைப்பற்றியும் பழம்புலவர்கட்கு வரலாறெனக் கட்டிய பொருந்தாக் கதைகளைப் போன்று புனைந்துரையாமைக்காகப் புராணமுடையார்கட்கும், சரிதை, மஞ்சரிபோன்ற கதைகாரர்கட்கும் நன்றிசெலுத்துவேமாக.

இவர் பாடியனவாக நெடுந்தொகையில் இரண்டும், குறுந்தொகையில் எட்டும், நற்றிணையில் மூன்றும், வள்ளுவமாலையில் ஒன்றும் ஆக, பதினான்கு பாக்கள் காணப்படுகின்றன. ஆராய்ச்சித்துறை போகிய அறிஞர்கள் வள்ளுவமாலையானது, வெள்ளியம்பலத்தார், கந்தியார் போன்ற வொரு பிற்காலப் புலவர் யாத்துப் பழம் புலவர் பல்லோர் வாய்மொழியென வகுத்த

பொருந்தா வழக்கென்ப. யாவர்க்கும் ஒப்பமுடிந்துள்ள குறளறமும், ஒரு சாரார்க்கே உரித்தாயுள்ள செய்யாமொழியுந் தரும் பொருள் ஒன்றுமோ? அவையிரண்டும் ஒன்றெனப் புலமை சான்ற இப்பெண்ணின் பெருந்தகை பேசியிருப்பரோ? அவர்பாடியதன்றெனக் கருதும் வெண்பாவினை ஆதாரமாகக் கொண்டு, சேதுகாவலர் அவைப்பாவலர், மாபெரும்புலவர், நம் மதிப்பிற்குரிய உயர்திரு ரா. இராகவையங்கார் அவர்கள் "இவர் வேதவழக்கொடு பட்ட கொள்கையினர்" என அறுதியிடினும், மெய்ப்பொருள் ஆய்ந்து முடித்தற்குரியது.

புறப் பொருட்டுறையில் பாடப்பெற்ற பாக்களிற் காணப் பெறும் செய்திகளெல்லாம் பாடினார் பாடப்பெற்றார் ஆகியவர்களோடு தொடர்புடையனவாகும். அகப்பாக்களிற் காணப் பெறுஞ் செய்திகள் கிளவிக்குரியாரோடு தொடர்புடையவாகும். அல்லாது அகத்துக் காணப் பெறும் நிகழ்ச்சிகளைப் பாடினார் மேலேற்றின் "மக்கள் நுதலிய அகனைந்திணையுஞ் சுட்டியொருவர் பெயர்கொளப்பெறார்". எனும் தொல். அக. நூற்பாவிற்கு மாறாகும். ஆண்பாற் புலவர்கள் தலைவி கூற்றாகவும், தோழி கூற்றாகவும், செவிலி கூற்றாகவும் செய்த அகப் பாக்கள் கூறுஞ் செய்திகளை அப்புலவர்கள் மேலேற்றல் யாங்ஙனம் பொருந்தும். எடுத்துக்காட்டாகத் திருக்கோவையினை அருளிய மணிவாசகப் பெருமானின் நிலைமையும் கோவைதரு பொருளொடு சார்த்திக் கூறுதற்காமோ. ஔவை பாடலில் "வெள்ளிவீதியைப் போல நன்றுஞ் செலவயர்ந்திசினால் யானே" என்றுள்ளமையின், அவரது நிலையும் அதுவெனக்கொள்ளல் சாலுமா? அகத்துக் காணப்பெறும் நிகழ்ச்சிகளைப்பாடினார் மேலேற்றற் கேற்பவும், நச்சினார்க்கினியர் "மக்கள் நுதலிய..." என்ற நூற்பாவிற்குப் பொருள் விரித்துள்ளமையும், அதனைத் தழுவி நற்றிணை உரையாசிரியரும், "நல்லிசைப்புலமை மெல்லியார்" என்னும் நூலுடையாரும், அபிதானசிந்தாமணியாரும் வெள்ளிவீதியின் பாக்களிற் காணப்பெறும் செய்திகளை அவர் மேலேற்றி வரலாறு விரித்துள்ளதும் பொருந்துமாறில்லை.

இவர் பாக்கள் சுருங்கிய சொற்களாற் பரந்தாழ்ந்த கருத்துக்களை நயமாகத் தெளிவுடன் எளிதான உவமை முகத்தான் விளக்குஞ் சிறப்பின. உழிஞ்சில் நெற்றொலியைக் களப் பறையொலிக்கும், குறுக்கைப் பறந்தலையார்ப்பை ஊரவர் தூற்றிய அலர்க்கும், வானவரம்பனின் முற்றுகையுட்பட்ட மக்களின் துயரைப் பிரிதற்றுன்பமிகையால் வருந்தற்கும், முருக்கரும்பைப் பெண் புலியின் நகத்திற்கும், நல்லான் தீம்பால் பயனற்றுப் போதலைத் தலைமகளின் நலன் நுகரப் பெறாது கெடுதற்கும்,

வெயிலான் வெண்ணெயுருகுதலைக் காம நோய் பரவுதற்கும், கையில் ஊமன் நிலையைத் தன்னாலாற்றிக் கோடற்கும் பிறர்க் கெடுத்தியம்பற்கு மியலாத தலைமகன் நிலைக்கும், வெள்ளம் மோதிக்கரையிடிந்து போதலைக் காமமிகையால் நாணழிதற்கும் உவமையாகக் கூறியுள்ளமை வியந்து பாராட்டத்தக்கது.

மேலும், 'மள்ளர்குழீஇய' எனுஞ் செய்யுளாசிரியை, ஆதி மந்தியாரைப் பற்றிய குறிப்பும், திருவழுந்தூரில் வாழ்ந்தவனும், நாதன் கோயிற் கடுத்த குறுக்கையிலிருந்த புன்னையினைக் காவன் மரமாகக் கொண்டவனுமாகிய 'திதியன்', அப்புன்னையினைத் தடிந்த 'அன்னி' யொடு பொருத செய்தி முதலிய வரலாற்றுக் குறிப்புக்களும், 'கன்று வயிறூரவுண்டபின் கறத்தல்', 'முது மக்கள் மணம்பேசி முடித்தல்', 'முதுமக்கள் தலையிற் பாகையும் கையிற் கோலுங் கொண்டிருத்தல்' கொக்கிறகன்ன வெளி தாயுடை யுடுத்தல் ஆகிய அற்றை நாளைய வழக்காறுகளும் இவர் பாவினுல் அறியக்கிடக்கின்றன.

பிற்காலத்து மன்மதோபாலம்பனப்படலம், நிலாத்தோற் றப் படலம் என்றெலாம் பலபட விரித்துப் பேசிய செய்திகளை, "காமமோ பெரிதே களைஞரோ இலரே", "திங்களுந் திகழ்வா னேர்தரும்", எனச் சிறு சிறு சொற்றொடர்களால் வனப்பு மிக விளக்கியுள்ள இடங்கள் சிறப்புடையனவாம். "......ஓங்கு மணற் சிறு சிறை—தீம்புனல் நெறிதர வீந்துக்காங்குத்—தாங்கு மளவைத் தாங்கி—காமம் நெறிதரக் கைந்நில்லாதே", என நாணழிதலை இவர் விளக்குகின்றுங்கு, மணிமேகலையாசிரியரும்,

"சிறையும் உண்டோ செழும்புனல் மிக்குழீ
நிறையும் உண்டோ காமம் காழ் கொளின்—எனக் கூறி யிருத்தல் காண்க.

பிரிதற்றுன்பமிகையால் வாடி யிருந்த தலைவி, தோழி தூது விடுத்தாயினும் தலைவனைத் தன்பால் சேர்த்தல் வேண்டி, அவர் நிலத்தைக் குடைந்துகொண்டு சென்றிருக்கமாட்டார், விண் ணுலகிற்கும் பறந்து சென்றிருக்கமாட்டார், காலால் நடந்து கடலைத் தாண்டியும் சென்றிருக்கமாட்டார், நாடுகள்தோறும் ஊர்கள்தோறும், வீடுகள்தோறும் சென்று தேடின், காணு தொழியார், என அன்பின் வேட்கை தோன்ற விளம்பியதாக வருவது

"நிலந்தொட்டுப் புகாஅர் வானம் ஏருர்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்

நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோநங் காத லோரே'' (குறுந். 130)

இது பாலைத்திணையின் பாற்படும். மகளிரின் உள்ளப்பாங்கு, தலைவனைப் பிரிந்திருக்கும் நிலையில் எவ்வா றிருக்குமென்பதை இப்பாட்டுப் புலப்படுத்துகின்றது.

தண்ணிய பன்னிறத்தா லும் வண்டொலியா லும் தீந்தே னு லும் நறுமணத்தா லும் தென்றல் தவழ்பைம்புல் வெளியா லும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதல் ஆய ஐம்புலன் நுகர்விற்கும் விருந்தாகி, இன்பத்தைச் சிறப்பிக்கவல்ல இயற்கை வளம் செறிந்த குறிஞ்சித்திணையில் இவர் தீட்டிய உயிரோவி யம் நம் அறிவிற்கு நல் விருந்தாகும். அஃதாவது இரவுக் குறிக் கண் வந்த தலைவனை வறிதே பெயர்க்குமுகத்தான் அவனைக் காணுதாள் போன்று சில ஏதுக்கள் கூறி விடுத்தலாக வருவது.

குளிர்ந்த அருவிகள், பாம்புகள் வாழும்படியான மலைப்பிளவு களி லும் புகுந்தோடி, மலைப்பொதும்பர் சிதறும் தேன்றுளி களையும் கலந்துகொண்டு இனிதாகித்துறைவழி நிறைந்தொழு கும் காஞறுகள் குறுக்கிடும்படியானதும், வெள்ளிய கொம் பினையுடைய களிறொடு பொருது, புண்மிகப் பட்டதற்காற்ரு தாய் முழைஞ்சில் நொந்திருந்த பசிய கண்ணையுடைய துணைப் புலிக்குப் பின்னரும் ஏதம் யாதும் விளையாதிருக்க, முருக்கரும் பன்ன வலிய நகத்தையுடைய வெற்றிவாய்ந்த பெண்புலி காவல் புரிந்து உலவலின் எவரும் செல்லுதற்கரியதுமான வழியென,

"பாம்புடை விடர பனிநீர் இட்டுத்துறைத்
தேங்கலந் தொழுக யாறுநிறைந் தனவே
வெண்கோட் டியானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வல்லுகிர் வயப்பிணவு
கடிகொள வழங்கா ராறே"—

என்பதுகாறும் ஆற்றின் அருமையும், "வழங்கார்" என்ற பன்மையானே பலர் ஒருங்கு கூடியும் செல்லுதற்கரிய வழியிற் றலைமகன் தனித்துவருதல் தக்கது அன்றென்றும் கூறி, இனைய வழியிடை, இரவென்றும் கருதானுய் வெற்றிவேலேந்திய கையனுய், விருப்பமிகையான் வந்த நலமிக்க தலைவன் தன் எண் ணம் நிறைவேருது வறிதே மீளின் மிகச்சிறுபொழுதும் தன்னுல் உயிர்வாழ இயலாதென்பதையும் வாழ்தலினுலும் பயன் இன் றென்பதையும்

—" ஆயிடை
யெல்லிற் றென்னுன் வென்வேலேந்தி

நசைதர வந்த நன்னராளன்
நெஞ்சு பழுதாக வறுவியன் பெயரின்
இன்றிப் பொழுதும் யான் வாழலனே
எவன்கொல் வாழி தோழி''—

என்பது காறும் தங்கள் அன்பின் முதிர்வுதோன்றக்கூறி, பொன்போலும் தேமல் படர்ந்துள்ள மார்பகத்து விளங்கும் முத்தாரம் போலவும் மலைப்பொழிலிடைத் தண்டுளி சிதறி இழிதரும் வெள்ளருவிபோலவும் திங்களங்கதிர் ஒளி செய்கின்ற தென்பதை

—நம்மிடை மலைச்
சுணங்கணி முற்றத் தாரம் போலவும்
சிலம்புநீடு சோலைச் சிதர் தூங்கு நளிர்ப்பின்
இலங்குவெள்ளருவி போலவும்
நிலங்கொண் டனவால் திங்களங் கதிரே,

என்றும் கூறி, அன்று களவு நிகழ்த்தற்கு இயலாததென்பதைப் புலப்படுத்துவதாகக் குறித்துள்ளார்.

தலைமகன் வறிதே மீளற்காக வருந்தாதிருத்தல் வேண்டி நாகரிகமாக வழங்குமிவ்வுரை ஒன்றுமே வெள்ளிவீதியாரின் மேதகு புலமையினைக் காட்டற்குச் சாலும். இவர் பாடிய அனைத்தும் சுவைத்தற்கினியன. விரிப்பிற் பெருகுமாதலின் இத்துடன் இதனை நிறைவிப்பன்.

## நன்கொடை 1943, செப்டம்பர்

### ஏழை மாணவர் நிதி

திரு. து. சிவனேசம்பிள்ளை அவர்கள், களக்குடி, நெல் கலம் 2

### தொடக்கப்பள்ளி

அரசியலார் உதவித்தொகை ரூ. 459—11—0

### மருத்துவசாலை

திரு. க. தியாகராசபிள்ளை அவர்கள், B. A., கல்கத்தா ரூ. 100— 0—0

### சங்கம்பொது

திரு. R. பழநித்துரைபிள்ளை அவர்கள், திருவாலம்பொழில்

புலவர் கல்லூரி ரூ. 0— 2—0

திரு. ஜினகுமாரமுதலியார் அவர்கள், கரந்தை ரூ. 0— 8—0

,, C. வேதாசலம்பிள்ளை B. A. B. L., அவர்கள், மதுரை ரூ. 10—0—0

கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை 2ம் பகுதி ரூ. 25—0—0

# *வைணவம்

திருவாளர். N. துரையரங்கராமானுசதாசர் அவர்கள்
நகரக்கண்காணிப்பாளர், புதுவை.

அஞ்சு குடிக்கொரு சந்ததியாய், ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்,—பிஞ்சாய்ப்
பழுத்தாளை யாண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து.

சீர்தழைக்க இப்பேரவையின்கண் எழுந்தருளியிருக்கும் பேரன்பர்களுக்கு அடியனின் வணக்கம் பல.

வைணவம் என்பது திருமால் சமயத்திற்கு வழங்கிவரும் பெயர். "படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும் உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துள" பொருளின் தொடர்புடைமை என்பது இதன் பொருள். இதனுனே. உலகத்துள்ள அனைவரும் விட்டுணு சம்பந்தம் உடையவர்கள் என்பது போதரும்.

விட்டுணுவின் சின்னங்களைத் தரித்திருப்பவர்கள் மாத்திரம் வைணவர்கள் என வழங்கக் காண்கின்றேமாயினும், விட்டுணு சம்பந்தம் அற்ற ஒருவர் இருத்தல் இயலாமையானும், விட்டுணு சமயத்திற்குரிய சிறப்பிலக்கணங்களை யுடைமையானும் எந் நாட்டவரும், எந்நிறத்தவரும், எச்சமயத்தவரும் வைணவர்களே யாவர். "வைணவம்" என்கின்ற சொல்லிற் பெருகும் இப் பொருளுடைமை பற்றியே நம் தமிழ் நாட்டின் மிகப் பழையதான திருமால் சமயம் இப்பெயரை ஏற்றதென்பது அறிஞர்களின் துணிபு.

வைணவம் என வழங்கப் படுதலான் இந்தச் சமயம் தமிழ் நாட்டினதன்று, வந்தேறியதெனச் சிலர் பேசிவருதல் தவறு. ஏனெனின், தம் மதமே பழமையானதென்று கூறிவரும் அவர்கள் நூல்களும் இம்மதத்தைக் குறித்துச் சொல்வதனுனும், தமிழ் நாட்டின் மிகப்பழைய சங்கநூல்களுள் இதனைப் பற்றி ஆங்காங்கே தெள்ளத் தெளியத் தெரித்திருக்கும் முறையானும்

*காந்தை திரு. எம்பெருமானர் தரிசன சபையின் முதலாண்டு விழாவில் வழங்கிய தலைமையுரை.

இதன் தொன்மை வெள்ளிடைமலையென விளங்கும்.

தமிழைப் போற்றி வளர்த்தும், தமிழர் ஒழுக்கங்களை நிலை நாட்டியும் வைத்த சமயம் ஒன்றுள்ள தெனின் அது திருமால் சமயம் என்றல் மிகையாகாது. தமிழ் மறைகள் திருமால் முன்பு கோயில்களில் ஓதப்பட்டு வருதலும், திருவிழாக் கண்டருளுகிற பொழுது எம்பெருமான் நடுவே எழுந்தருள, வடமொழி வேதம் அவனுக்குப் பின்னே ஓதப்பட்டுவர, தமிழ்மறை முன்னே ஓதப் பட்டு வருதலும், வடமொழி மறைகளை ஓதுவார்க்கு இல்லாத மதிப்பு தமிழ்மறைகளை ஓதுவார்க்கு வழங்கப்பெற்று வருதலும், வைதிகச் சடங்குகள் அவைகளாலேயே நிகழப்பெற்று வருதலும் தென்கலை மரபு (சம்பிரதாயம்), வடகலை மரபு என நிகழ்ந்து வரும் போராட்டங்களும் இவ்வுண்மையை விளக்கும் சான்று களாகும்.

ஆதலான், தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ்த் தொண் டாற்றலாற் சிறப்புடையதெனப் போற்றப்பெற்று வரும் இக் கரந்தையம்பதி, தமிழை வளர்த்த திருமால் சமயத்தை வளர்ப் பான் "எம்பெருமானார் தரிசன சபை"யையும் நிறுவி, அதனை வளர்க்கப் புகுந்தமையான்; இவ்யாண்டு தொட்டே உண்மைச் சிறப்பினை யெய்திற்றென்று பேசலே சிறக்கும்.

சமயங்களே நம் நாடு இந்நிலைமையை யுடைந்ததற்குக் காரணங்கள் என்று ஒரு சிலர் கருதித் தம் கருத்தை எங்கும் பரப்பி வருகின்றனர். அது சமயங்களின் உண்மையை அறியாக் குறையே யாகும். நாமும் அதனை யறிந்து ஒழுகுகின்றோ மில்லை. சமயங்கள் மக்களுக்குப் பெரும் நலன்களைப் பயத்தற்கு அமைக் கப் பெற்றவை. சமயக் கருத்துக்கள் ஒன்றற்கொன்று சிறப் புடையனவாகக் காணப்படுதல், சமயங்களை வகுத்த பெரியார் களுக்கு மக்களின் சேவையில் உண்டாயிருந்த அறிவையும் மனப் பான்மையையும் பற்றியனவாகும். ஈண்டு வைணவத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

வைணவம் மக்களுக்குப் பெருந்தொண்டாற்றும் சமய மாகும். இத்துறையில் இதனுக் குள்ள சிறப்பு மற்றொன்றற்கு இராதென்றற்கும் இடமுண்டு. உயிர்கள்பால் அன்பைச் செலுத்துதலாலன்றி அன்புருவான இறைவனைப் பிறவாற்றால் காணல் அரிதென்றல் இதனுடைய முக்கிய நோக்க மாகும். முதலாழ்வார்கள் எனப் பேசப்படுகின்ற பொய்கை, பூதன் பேயார்களின் வரலாறு இதற்குப் பெருஞ் சான்றாகும்.

"பரதுக்க அஸஹிஷ்ணுத்வமும் பரஸம்ருத்யைக ப்ரயோ ஜநத்வமு மிறே ஸ்ரீவைஷ்ணவ ஸ்வரூபம்" என்றொரு பெரியார்

பேசியுள்ளார். பிறர் துன்பம் பொருமையும், பிறர் வாழ் வொன்றற்கே தான் வாழ்தலுமாகின்ற இவ்விரு பண்புகளை யுடைமையே வைணவ னுதல் என்று இதனுல் அறுதியிடப்பட் டுள்ளது. "ஒருவனுக்கு ஸ்ரீவைஷ்ணவத்வம் உண்டு இல்லை யென்னுமிடம் தனக்கே தெரியுங்காண். பிறர் அனர்த்தங் கண் டால் ஐயோ என்றிருந்தாளுகில் 'நமக்கு பகவத் ஸம்பந்தம் உண்டு' என்றிருக்க அடுக்கும்" என்று கூறிப்போந்தார் மற் ெருரு பெரியார்.

"அன்றிலின் அவஸ்தை பிறந்தபோது காண் ஆத்ம ஞானம் பிறந்த தாகும்" என்பது திரு. ஆளவந்தார் அருள் மொழி. அன்றிற் பறவைகள் மிகுந்த ஒற்றுமை யுடையன; பிரிவுக் காற்ருது ஒன்றன் கழுத்தோடு ஒன்று பிணைந்து ஒன்றுபட்டிருக் கும் இயல்பின. தன்னைச்சூழ்ந்துள்ளார் பக்கலில் அத்தகைய ஒற்றுமை யுண்டாளுலன்றி, ஒருவன் தன்னை உண்மையான சமய அறிவுடையவன் என்று பேசுதற்கில்லை என்கின்ற உண்மை இதனுல் புலனுறும்.

"குற்றம் செய்தவர் பக்கல் பொறையும், கிருபையும், சிரிப் பும், உகப்பும் உபகாரஸ்மருதியும் (நன்றியறிதல்) நடக்க வேணும்" உபகாரஸ்ம்ருதி என்கின்ற பதத்திற்கு, விரிவுரை யருளிய ஆயி என்பவர் காண்பித்துள்ள வரலாறும் ஈண்டு குறிப்பிடுதற் குரியது. அது "பட்டர் ஒரு நாள் பெருமாள் சந்நிதியிலே தோஷாநுஸந்தானம் பண்ணுநிற்க, சிலர் செவி பொறுக்க வொண்ணுத பருஷோக்தி (வசை) பண்ணக் கேட்டு, சாத்தின திருவாழி மோதிரத்தையும் திருப்பரியட்டத்தையும் கொடுத்தருளி, முதலிகளை (சிடர்களை)ப்பார்த்துப் பருஷித்ததுக்கு (வைததற்கு) அஞ்சிக் கொடுத்தேனன்று; நாமறியாத தோஷங் களையும் பெருமாள் திருச்செவி சாத்தும்படி சொன்ன வுபகாரத் தைப் பற்றக் கொடுத்தேனத்தனை......" என்பதாம். "ஸம்ஸாரி கள் தோஷம் ஸ்வதோஷ (தன் குற்ற) மென்று நினைக்கக் கடவன்." "தன்மாட்டும், தன் நண்பர் மாட்டும், தன்மீது பகை பாராட்டுபவர் மாட்டும் ஒரு நிகரான புத்தியை யுடையவன் எவனே அவனே ஸ்ரீவைஷ்ணவன்" என்கின்ற இன்னேரன்ன அரிய உயிர்ப்பண்புகளைத் தனக்குரிய சட்ட திட்டங்களாகவே அமையப் பெற்ற வைணவ சமயத்தின் பெரும்புகழ் மொழியைக் கடந்ததாகும்.

(தொடரும்)

# ஆறு பிரத்தியயங்களின் விளக்கம்.

திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், சென்னைப் பல்கலைக்கழக
ஆராய்ச்சியாளர்.

(முற்றொடர்ச்சி : துணர் ௰௩, மலர் 6, பக்கம் ) 122

**பி**ன்பு, முதற்பத்தியின் அடியிலுள்ள 1 என்னும் எண்ணையும் நான்காம்பத்தியின் அடியிலுள்ள 5 என்னும் எண்ணோடு கூட்டி 6 என்று அந்த 5க்கு நேரே முன்னால் எழுத வேண்டும். இவ்வாறே இறுதிவரை எழுதவேண்டுவது.

உதாரணமாக 'காயத்ரி' சந்தஸை எடுத்துக்கொள்வோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 6 | | | | |
| 5 | 15 | | | |
| 4 | 10 | 20 | | |
| 3 | 6 | 10 | 15 | |
| 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | | | | |

ஒவ்வொரு வரியிலும் இறுதியில் உள்ள எண்கள் முறையே ஸர்வ குரு, ஓர் இலகு, இரண்டு லகு, மூன்று லகு, நான்கு லகு, ஐந்து லகு முதலாகவுள்ள விருத்தங்களின் தொகையைக் குறிக்கும்.

இதனால்,

| | | | | |
|---|---|---|---|---|
| ஸர்வகுருவுள்ள விருத்தம் | | | 1 | (குரு 6) |
| ஓர் இலகு உள்ள | | ,, | 6 | (குரு 5) |
| 2 இலகு | ,, | ,, | 15 | (குரு 4) |
| 3 இலகு | ,, | ,, | 20 | (குரு 3) |
| 4 இலகு | ,, | ,, | 15 | (குரு 2) |
| 5 இலகு | ,, | ,, | 6 | (குரு 1) |
| 6 இலகு | ,, | ,, | 1 | (குரு இல்லை) |


இவ்வாறே ஏழெழுத்துள்ள 'உஷ்ணிக்' சந்தஸைக் காண்போம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 7 | | | | | |
| 6 | 21 | | | | |
| 5 | 15 | 35 | | | |
| 4 | 10 | 20 | 35 | | |
| 3 | 6 | 10 | 15 | 21 | |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | | | | | |

| | | | |
|---|---|---|---|
| ஸர்வகுரு உள்ள | | விருத்தம் | 1 |
| ஓர் இலகு | ,, | ,, | 7 |
| 2 | ,, | ,, | 21 |
| 3 | ,, | ,, | 35 |
| 4 | ,, | ,, | 35 |
| 5 | ,, | ,, | 21 |
| 6 | ,, | ,, | 7 |
| 7 | ,, | ,, | 1 |

இனி, 'கண்டமேரு' என்னுஞ் செயலினால் எத்தனைச் சந்தஸுக்களுக்கும் குரு லகுக்ரியை செய்யலாம். அஃதாமாறு:

ஓரெழுத்துச் சந்தஸாகிய 'உக்தா' முதல் நாம் குரு லகுக்ரியை செய்ய நினைக்குஞ் சந்தஸ்வரை வீதி (கோடுகள்) கீறி, அவ்வீதியுள் (கோட்டினுள்) வீடு அமைக்கவேண்டும். வீடு அமைக்கும்போது அச் சந்தஸில் உள்ள எழுத்தின் தொகைக்கு மேல் ஒரு வீடு அதிகமா யமைத்துக்கொள்ள வேண்டும். அது வருமாறு:



உக்தா (ஓரெழுத்துச் சந்தஸ். அதனால் 2 வீடு)

அத்யுக்தா (ஈரெழுத்துச் சந்தஸ். அதனால் 3 வீடு)

மத்யா (மூவெழுத்துச் சந்தஸ். அதனால் 4 வீடு)

ப்ரதிஷ்ட்டா (நாலெழுத்துச் சந்தஸ். அதனால் 5 வீடு)

வீடுகளை அமைத்தபின், ஒவ்வொரு வீதி (வரி)யிலும் முதல் வீட்டிலும் கடைசி வீட்டிலும் 1 என்னும் எண்ணை எழுதிக் கொள்ளவேண்டும். பின், மேல்வீதியின் முதலிரண்டு வீடுகளிலுள்ள எண்ணைக்கூட்டி, அத்தொகையை அதன் கீழ் வீதியின் இரண்டாம் வீட்டில் குறிக்கவேண்டும். இப்படியே மேல்வீதியின் இரண்டு மூன்றாம் வீடுகளில் உள்ள எண்ணைக் கூட்டி அதன் கீழ் வீதியில் மூன்றாம் வீட்டில் குறிக்கவேண்டும். அப்படியே 3, 4-ஆம் வீடுகளில் உள்ள எண்ணைக்கூட்டி அதன் கீழ் வீதியில் நான்காம் வீட்டில் குறிக்கவேண்டும். இம் முறைப்படி, மேல் அமைத்த வீடுகளில் எண்களைக் குறிப்போம்:

(தொடரும்.)

# தமிழ்ப் பாட்டும் திரு. சி. ஆர். சீனிவாசனும்.

## பதிலுரையும் வேண்டுகோளும்.

*வழக்கறிஞர், திரு. T. P. வேதாசலம்பிள்ளை அவர்கள், திருச்சி.*

இசைக்கு மொழி இன்றியமையாதது என்ற கேள்வி தீர்ந்து பல திங்கள்களாகிவிட்டன. இசைக்கு மொழி இன்றியமையாததில்லையென்றும், கர்நாடக இசை தேவையென்றும், தமிழ்ப் பாட்டுக்கு ஆதரவு கொடுத்தால் இசை முறைக்குத் தீங்கு விளைந்து விடுமென்றும் திரு. சி. ஆர். சீனிவாசன் சென்ற 21—9—43ல் பைன் ஆர்ட்சு அகாடெமியில் பேசினார். அவருடைய பேச்சில் புதிய காரணம் எதுவுமில்லை. அவர் உரைகளுக்கெல்லாம் ஆணித்தரமான பதில் பலதடவை பல நாட்களுக்கு முன்பே கொடுத்தாகிவிட்டது. அவர் பேச்சு பயனற்றவையென்று எடுத்துக்காட்டத் தமிழ் இசை இயக்கத்தின் பலமும், அதற்குத் தமிழ்நாடு முழுவதும் நாளுக்குநாள் மிகுதிப்பட்டு வரும் பேராதரவுமே போதுமானவை.

இசை வளர்ச்சிக்காக ஏற்படும் ஒவ்வொரு புதிய இடத்தையும் சீனிவாசன் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார். ஆனால் அதே சமயத்தில், தமிழ்ப் பாடல்களை ஆதரிப்பதனால் இசையின் மேன்மை குறைந்துவிடுகிறதே யென்று கண்ணீர் வடிக்கிறார். தமிழ் இசை இயக்கத்தார் இசைத்துறையிற் புகுந்துவிட்டார்களே யென்று சஞ்சலப்படுகிறார். எல்லாப் புதிய நிலையங்களையும் விரும்பியேற்கும் இவர் தமிழ் இசை இயக்கத்தை மட்டிலும் வெறுப்பது ஏன்? அவ்வியக்கத்தைப் பகைவர் படையெடுப்பென்று பேசுவது எக்காரணம் பற்றி? காரணம் அவருக்குத் தான் தெரியும்போலும். தமிழ் இசை இயக்கத்தில் அவருக்குள்ள வெறுப்பே காரணமாயிருக்கலாம். தான் தமிழ்ப் பற்று மிக்கவரென்றும் தமிழ் மொழியின் பழம் பெருமையில் பேரார்வம் உள்ளவரென்றும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறார். ஆனால் தமிழ் மொழியில் அவருக்குள்ள பற்று இவ்வளவென்று "சுதேசமித்திரன்" தமிழை வாசிப்போருக்கு நன்கு விளங்கும். இசைக்கும் இசைப் புலவர்களுக்கும் முழு உரிமையும் வேண்டுமென்று மன்றாடுகிறார். தமிழ்மொழியில் பாடவேண்டுமென்று பெருவாரியான தமிழ் மக்களுக்கிருக்கும் ஆர்வத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்று வீரங் கூறுகிறார். இசையின் பழைய மேன்மை குறைந்துவிடுகிறதேயென்று குறை

கூறி ஏங்குகிருர். பழைய இசையின் உயர்வைக் குறைக்க யாராவது ஏதேனும் சூழ்ச்சி செய்கிருர்களோவென்று ஆராய்ந் தால் நமக்குத் தெரிந்தவரையில் அவ்விதம் யாரும் தீங்கிழைக்க வில்லையென்பது திண்ணம். தமிழ் இசை இயக்கம் பலநாட் களுக்கு முன்பே விளக்கமடைந்திருந்த பாடல்களுக்குப் புத்துயி ரளிக்க ஏற்பட்டது. தெலுங்குப் பாடல்களை அறவே ஒழித்து விட வேண்டுமென்பது தமிழ் இசை இயக்கத்தின் நோக்கமல்ல. இதை எத்தனையோ சமயங்களில் தமிழ் இசை அன்பர்கள் விளக்கிக் கூறியிருந்தும் இதை அறியாதவர் போல சீனிவாச னும் அவர் போன்ற மற்றவர்களும் பேசுவது வியப்பாக இருக் கிறது. தங்கள் கட்சிக்கு வேறெதையும் சொல்லிக் கொள்ள முடியாமல் இதையே பல்லவியாகப் பாடிக்கொண்டு வருகிருர் கள். தமிழ்ப் பாட்டுகளிலும் உயர்தரமான பாடல்களுக்குத் தான் ஆதரவளிக்கப்படும். பேரும் புகழும் பெற்ற பெரிய கவிஞர்களின் பாடல்கள்தான் திரட்டப் பெறுகின்றன. முன் புகழ் வாய்ந்திருந்து, இடைக்காலத்தில் ஆதரவு குறைந்திருந்தும் அழிவடையாத உயர்ந்த பாடல்கள்தாம் பாதுகாத்து வைக்கப் பெற்றிருக்கின்றன. நெடுநாளைய போற்ருமையாற் கூட அழிந்து போகாமையே அப்பாடல்களின் வீரியத்தையும் அவைகளிலுள்ள இசைச்சிறப்பையும் மெய்ப்பிக்கிறது. இவ்விதம் சிறந்தொண்டு புரிபவர்களை வாழ்த்தவேண்டியிருக்க, வன்பு, வெறுப்பு, தன் னலம் முதலிய காரணங்களால் வசை கூறுவது அறமன்று.

கர்நாடக இசையும் ஒருநாள் புது இயக்கமாகத்தான் இருந் திருக்கவேண்டும். அந்நாளுக்கு முன்பே தமிழ்நாட்டில் இசை இருந்ததென்பதை யாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இல்லையென்று மறுக்க எவரும் முன்வரத் துணியார். பல நூற்ருண்டுகளாக நாட்டில் பரவியிருந்த இசையைப் புத்துயிர் கொடுத்துப் போற்றுவதால் இசையின் மேன்மைக்குக் குறை வாவது இழிவாவது, அதன்மூலம் நாட்டிற்குத் தீமையாவது ஏற்பட்டுவிடுமோ என்று யாரும் கவலைப்படவேண்டாம். தியா கையர் சியாமா சாத்திரிகள், முத்துசாமி தீட்சதர், புரந்தரதாசர் முதலியவர்கள் மற்ற மொழிகளிற் செய்த உருப்படிகள் கொஞ் சங் கொஞ்சமாகத் தான் விளக்கமடைந்திருக்க வேண்டும். உண்மையில் அவை விளக்கமடைந்தது மிகப் பிற்காலத்தில் தான். இதில் ஒரு வியப்பு என்னவென்ருல், தியாகையருடைய தெலுங்குப் பாட்டுகட்கு தெலுங்கு சில்லாக்களில் மதிப்பின்மை யே. அவைகளின் சிறப்பை முற்றிலும் நுகர்தற்குப் பெரும் பாலும் தமிழ்நாட்டு புலவர்களே கருவியாக இருக்கிருர்கள். தமிழ்ப் பாடல்களையும், அவற்றின் மேன்மையையும் புதுப்

பித்துப் போற்றவேண்டுமென்று தமிழர் விரும்பினுல் உண்மைத் தமிழ் அன்பர்கள் ஏன் எதிர்க்க வேண்டும்?

கடுமையான சொற்களால் எலும்புகள் முறியா. ஆயினும் அவை மனத்தைப் புண்படுத்தும். சீனிவாசன் பேசியதைப் போன்ற விரும்பத்தகாத சொற்களினுல் ஒரு பயனும் உண்டாகி விடமாட்டாது. ஓய்ந்தொழிந்து போன பழைய பேச்சுக்களை மீண்டும் மீண்டும் கடுஞ் சொற்களால் வற்புறுத்துவது யாருக்கும் எவ்வித நன்மையும் ஆகாது. அவைகளால் தமிழ் இசை இயக்கம் தடைப்பட்டு அடங்கிவிடாது. அதை எதிர்ப்பவர்க்கும் யாதொரு நன்மையும் விளைந்துவிடாது. இவ்வித போலியுரைகள் இருதிறத்தார் மனத்தையும் புண்படுத்துமேயல்லாமல் இருவர் நோக்கத்திலும் ஒரு படியாவது முன்னேற்றம் அடைய இடந்தரா. அவை பேசுவோர்களின் உள்ளத்தைத் தான் வெளியாக்கும். நட்பைப் பிரித்துப் பகைமையை உண்டாக்கும். இருதிறத்தார் முயற்சிகளையும் வீணுக்கி நாட்டுக்கு இழப்பையே தரும். பொதுநோக்கமான இசை நலத்தைக் கருதி ஒன்றுபட்டிருக்கவேண்டிய தமிழர்களை இரு கட்சியினராகப் பிரித்து இன்னல் விளைவிக்கும் முற்போக்கைத் தடுத்து, நாட்டின் நலங்கருதி ஒற்றுமையாகச் செய்யவல்ல முயற்சிகளை முன்னின்று எதிர்க்கும் திரு. சீனிவாசன் போன்றவர்கள் எவ்விதத்திலும் முற்போக்கிற்கான வழிகளை ஆராய்ந்து, வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு உழைத்துவரும் இயக்கங்களை ஆதரித்து, பயனுள்ள கருத்துக்களைக் கூறிப் பொதுநல நோக்கத்துடன் புது வேலைகளில் அவரவர்க் கேற்ற பங்கெடுத்துக் கொண்டு தொண்டாற்ற வேண்டும். எத்துறையில் குறைகள் இருப்பினும் நட்பு முறையில் அவற்றை போக்கிக்கொள்ள உதவி புரியவேண்டும். அவ்வித அன்பர்களுடைய கருத்துக்கள் மகிழ்ச்சியாக கொள்ளப்படும்.

(தொடரும்.)


தொல்காப்பியர் பொருட்படலம்

**புத்துரை**

பேராசிரியர்,

இளசைக்கிழார், திரு. S. S. பாரதியார் அவர்கள், பசுமலை

விலைவிபரம்.

| | | | |
|---|---|---|---|
| **அகத்திணையியல்** | ... | ரூ. | **1—0—0** |
| **புறத்திணையியல்** | ... | ரூ. | **1—0—0** |
| **மெய்ப்பாட்டியல்** | ... | ரூ. | **1—0—0** |

**கிடைக்குமிடம் :—கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.**

# மெய்கண்டார் நூல் மொழிபெயர்ப்பா ?
# தமிழ் முதல்நூலா ?

*பேராசிரியர், திரு. S. சோமசுந்தரபாரதியார் அவர்கள்,* M. A., B. L.,
*பசுமலை.*

சிவநெறிச் செல்வரான மெய்கண்டார் பெயரால் வழங்கும் நூற்பெயர்யாது? அதை முதலில் இயற்றியவர் யார்? சுத்தாத்துவித வைதீக சித்தாந்த சைவசமய குரவர்களே இவற்றை வேறுபடக் கூறுகின்றனர். மாதவச் சிவஞான யோகிகள் வடகைலையில் சங்காரக் கடவுளான உருத்திரனுரிடம் உபதேசம் கேட்ட நந்தி தாம் கேட்டபடி சனகாதி முனிவருக்குத் 'தேவபாடை'யில் இயற்றித் தந்தது சிவஞானபோதமென்றும், அதைச் சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத்திருநாமமுடைய மெய்கண்டதேவர், பரஞ்சோதிமுனிவர்பால் பெற்றுத் தமிழில் மொழிபெயர்த்தார் என்றும் வற்புறுத்துகிறார்கள். சைவசரபமான விருதைச் சிவஞான யோகிகள், சிவபெருமான் தமிழில் இயற்றிய சிவஞான போதம் நந்திமுதல் பரஞ்சோதி முனிவர்வரை பரம்பரையாய்க் கேட்டுவந்ததை, மெய்கண்டார் ஏது திருட்டாந்தம் கூட்டி மீட்டுரைத்தாரென்று தம் "போதவினுவிடை"யிற் புகலுவர். **தனித்தமிழ்ப் பேருரையாளர் தன்னிகரற்ற சிவானுபூதிச் செல்வர் மறைமலையடிகள்,** நந்திமுதல் வழிவழியே உபதேச முறையிற் கேட்டுவந்த வுண்மைகளை வடித்து நூல்வடிவில் சிவஞான போதத்தை மெய்கண்டதேவர் இயற்றியருளினரென்று கருதுகிறார்கள். "மாபாடிய"ச் சிவஞானயோகிகள் இதன் முதல்நூல், வடமொழி **இரௌத்திராகமத்தில்** ஒரு படலம் என்பர், போதவினுவிடைப் பிந்திய யோகியார் இது சிவனுர் இயற்றிய தமிழ்த்தனி முதனூலென்பர். முனிவரான முந்திய யோகிகள் மெய்க்கண்டாரை மொழிபெயர்ப்பாளர் என்பர். இந்திர போகப்பிந்திய யோகியார் சிவன் சொல்ல நந்தி யெழுதிய தமிழ்ப் போத ஏட்டை வாங்கித் தமிழ் நாட்டிற்கு ஏதுக்கூட்டி மீட்டுரைத்தவரே மெய்கண்டார் என்று கூறுவர். மறைத்திருவடிகளாரும் விருதை யோகியாரோடு பெரிதும் உடன்படுவர்.

இவ்வாறு தம்முள் மாறுபடினும் ஒருவந்தம் இவர்கள் ஒருப்படுமொன்றிரு முடிபு முண்டு. "வடநூற்கடலுக் கெல்லை கண்ட மாதவ முனிவரும், வேதாகமங்களும் போதமும் ஆதியில் சிவனே தமிழில் செய்தவை யென்று முழங்கிய தமிழ்ச்சிவயோகியும் மறைமலையடிகளும், சிவநெறித்தமிழ்நூல் "சிவஞான போதமென" வடமொழிப் பெயரோடு எழுந்ததென்பர். அதன்

மேல், பிறரால் பிறந்த பெரும் பொருள்நூலைத் தானாக்கியது போல் நெஞ்சறிந்த பொய்யை அஞ்சாதுரைத்தவர் மெய்கண்ட தேவர் எனும் குறிப்பும் இவர் கூற்றில் உள்ளுறை முடிபாய் விளங்குகிறது. தமிழ்ப் "போதம்" மொழிபெயர்ப்பாயின் இதன் வடமொழி முதனூலையும், முதனூலாயின் இதனையுமே சிவன்பால் கேட்டு நந்தி கைலையில் எழுதினார் என்பதே, தவ யோகியும் சிவயோகியும் துணிந்த முடிபு. எனவே, வெண் காட்டு வேளாளர் மெய்கண்டவர் அல்லர், கைக்கொண்ட கைலை நூலை வையத்து வெளிப்படுத்தியவரே, மெய்யை மறைத்ததைச் செய்தது தாமெனக் கொள்ள வைத்தவர் அவர் என்று உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளியக் கண்டது போல் இவர் கூறு கின்றனர்.

"சிவஞானபோதம்" நூற்பெயரென்றும், அதை முதலிற் செய்தவர் நந்தியென்றும், ஆரியமொழியில் இரௌத்திராகமத் தின் ஒரு படலம் தமிழில் மொழிபெயர்த் துரைக்கப்பட்ட தென்றும் கூறுதற்கேற்ற குறிப்பு எதுவேனும் தமிழ் முதனூலினும், அதன் வழி நூலாகிய சித்தியாருள்ளும் சிறிதும் பெறுகிலம். அதற்கு மாறாக மெய்கண்டார்நூலை மெய்கண்டாரிடமே நேரிற் கேட்டுத் தெளிந்த அருணந்தி யார் அதன் விளக்கமாகத் தாமிற்றிய சிவஞான சித்தியா ரென்னும் வழிநூலில் "மின்னமர் பொழில் சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டார் நூல், சென்னியிற் கொண்டு சைவத்திறத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம்" என்று பாடினர். முதல்நூற் சிறப்புக் கூறும் செய்யுளிலதன் பெய ரைச் "சிவஞானபோதம்" என்னாது, "மெய்கண்டார்நூல்" என்றே கூறியிருக்க, அதைவிடுத்துப் புதிய வடமொழிப் பெயர் புனைந்து சூட்டுவானேன்? நூற்புலவரின் நாற்பத்தொன்பது மாணவருள் முதல்வராய், அந்நூலை விளக்கப்புகுந்த அருணந்தி யார் அறியாத பெயரை, யாங்ஙனம் கண்டு யாரிடம் கொண்டு யாவர் புகுத்தினர்? சிவன் தமிழர் தனிமுதற்கடவுள் எனவும், மாயாவாத ஆரிய வேதாந்தத்துக்கு மாறாகத்தமிழர் சிவ நெறி மெய்கண்ட நூலென்றும் பறையடித்து மகிழும் சான்றோர், தமிழ்ச் சிவநெறி அறிவுநூலை "ஞானபோதம்" என ஒரு பொருளுக்கு இரு வடமொழிச் சொல்லை இணைத்துப் பெயரிட்டுக் களித்து மயங்குவதேனோ?

இனி, மக்களுக்குய்யத் தக்க நூல்களைத் தரக்கருதிய தமிழ்ச் சிவனார், தமிழையிகழ்ந்து வேதாகமங்களை ஆரியர் மொழியி லாக்குவாரா? அதுமட்டோ? தன்னை வணங்குந் தமிழர்க்கு விலக்காய், வேதங்கேட்பின் உருக்கிய செம்பவர் காதில் ஏற்றுச் சாதற்குரியராய் விதிப்பாரோ? பலப்பல குட்டித்தேவரைப்

பரசும் வேதம் தமிழருக்கு வேண்டாமென்று அதை ஆரியர் மொழியிலாக்கினரெனினும், தன்னுயர் கடவுட்டன்மையை விளக்கும் ஆகமங்களையும் தமிழரறியா வடவர்மொழியி லியற்றி யருளிய எண்ணம் ஏதோ ? இனித் தமிழர் உய்யக் கருதி யனுப்பிய உயர் "சிவஞானபோத"த்தையேனும் தமிழிலன்றி ஆரியமொழியிலாக்கிய நோக்கம் யாதோ ? சங்கப்புலவராய்த் தங்கிய சிவனுர் தமிழிகழ்ந்தாலும், மொழிபெயர்த்தனுப்பத் தமிழறிந்தவர் கையிலில்லையா? ஆரியமறியாக்குதலைக் தமிழ்ச் சேய் சீரியநுண்பொருள் கல்லாமொழியுள தெல்லா முணர்ந்து சொல்லவல்லதென்று தெரிக்கத் திருவுள மிருந்தபெற்றியோ ? அவ்வருட்பேறு பெற்ற கடவுட் குழவி தான் மொழிபெயர்த் தளித்த மெய்வரலாற்றை மறைத்துளத்து அதைத் தனது முதனூல் போல அவை யடக்கியலொடு நவைபடச் செய்ததை நயக்க வொண்ணுமோ.

விருதையார் கூற்றினை மெய்யெனக்கொள்ளின், மெய்கண் டார் பொய்மை வையங்கொள்ளா வழுவாய்முடியும். நந்தி செய்து தந்த நூலைச் சொந்தமாக்கிய சுவேதவனர் செய்கை அந்தமில் பழிக்கு அவரை யாளாக்குமன்ரே ? கடவுட் சிவனே, கைலைநந்தியோ கண்டு தந்ததைக்கொண்டு தான் கண்ட தாய்ப் பொய்யுரைத்தவரைப் "பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவர்" எனப்புகழ்வது தகுமா ? சாக்கியர் போதமுற்றதால் புத்தரானது போல், சுவேதவனப் பெருமாள் சிவநெறியுண்மை களைச் சிந்தையிற் றெளியக் கண்டதால் அவர் புதிய புகழ்ப் பெயரால் துதிக்கப் பெற்றனர். தாம் கண்ட வுண்மைகளைத் திரட்டி வடித்தவர் செய்த நூற்கவர் புகழ்ப் பெயரே ஆகு பெயராய் "மெய்கண்டார்" என வழங்குகிறது. பிறர் கண்டதை இவர் கொண்டுரைத்தனரேல் இவர் மெய்கண்டா ரென்பது பொய்யாகும்.

இன்னு மிவ்வுண்மையைத் தெளிக்கும் சான்று வேறு முளது. சுவேதவனர் செய்த தமிழ்ச் சிவநெறிநூல் மொழி பெயர்ப்பென்போர் அதற்கு முதனூலாகக்காட்டும் வடமொழிச் சிவஞான பொதம், பன்னிரு சுலோகமுள்ளதோர் சிறு செய்யுள். அது, சிவனருளிய இரௌரவாகமத்தினெரு படலமென்பர். அவ்வடமொழிப் போதநூலிறுதிச் சுலோகமே அவர் கூற்றைப் பொய்யாக்கி அது முதனூலாகாமையையும், சிவஞானபோத மென்னும் பிறிதொரு நூலிலுள்ள எல்லாப்பொருள் நிச்ச யத்தையும் அது எடுத்துரைப்பதென்பதையும் விளக்குகிறது.

"ஏவம் வித்யாத் சிவஞான போதோ சர்வார்த்தி நிர்ணயம்" என்பது இறுதிச் சுலோகவீற்றடிமுடிவு. "இவ்வாறு சிவஞான போதத்தில் எல்லாப் பொருள்களும் நிச்சயிக்கப்படுதலறிக"

என்பது அதன் செம்பொருள். எனவே, வடமொழிச் சுலோகம் சிவஞானபோதமன்று, சிவஞானபோதத்திலிப்படி கூறப்படுகிற தென்று அது எடுத்துரைக்கின்றதென்ற உண்மை தெளிவாகிறது. சிவஞானபோதமென வடமொழியில் வேறுநூலின்மையாலும், மெய்கண்டார் தமிழ்நூலே நாளடைவில் சிவஞான போதமென வழங்குவதாலும், அச்சுலோகங்கள் மெய்கண்டார் பன்னிரு நூற்பாக்களின் மொழி பெயர்ப்பென்பது வெள்ளிடைமலேயாய் விளங்குகிறது. சிவனே முதலிற் செப்பியது அந்தச் சுலோகங்கள் ஆமேல், "இவ்வாறு உண்மைகள் சிவஞான போதத்தில் நிச்சயிக்கப்படுவதறிக." என்னும் கடையடி பொருள் முரணுகிய பொருந்தாக் குளறுபடையாகுமன்றோ? அதனுல் அவ்வீற்றுச் சுலோகக் கடையடி கூறுவது உண்மையென்பதும், தமிழில் விழுமிய நூல்களை யெல்லாம் வடவர் மொழி பெயர்த்துத் தமதாக்கும் வழக்குப்பற்றி மெய்கண்டார் நுண்பொருணூலும் வடமொழியில் பின்னர் பெயர்க்கப்பெற்ற தென்பதும், அது மொழிபெயர்ப்பாதலின் பாயிரம் அவையடக்கின்றி யாக்கப்பெற்றதும் தெள்ளத் தெளிய, இறுதிச் சுலோகமியம்புகிறது. அப்படியிருந்தும், தமிழ்நூலே மொழி பெயர்ப்பென்று மொழிபவர், அத்துவித சைவ சுத்த வைதிக சித்தாந்திகளாதலின், அதினமக்கு வியப்பின்று.

தென்றமிழ்ச் சிவனை வடவாரியரின் பனிமலை யேற்றி, நூற்புரி தோளில் நுடங்கச்சாத்திப் பார்ப்பானுக்கி வாழ்த்தி மகிழும் மனப்பாங்குடையார், நம்மவர் பேசும் தமிழை யிகழ்ந்து, தெய்வநூலெல்லாம் தேவபாடையிலிருப்பதே முறை யென்றெண்ணுதல் இயல்பு. தாமறியாத ஆரியர் வேதம் ஏமமென்று எண்ணுமவர் இயற்கைக் கேற்ப வேதாதந்தத்தின் வேருந் தமிழ்ச்சிவ நெறியைச் சுத்தாத்துவித வைதிகசைவ சமயமாக்கினர். வடமொழிபெயர்ப்பை முதனூலாக்கி, மெய்கண்டார் செய்த தமிழ் முதனூலை மொழி பெயர்ப்பென்றுர். அதனுலவ்விரு நூற் பெரியாரும் பொய்யராவதைப் பொருளாயெண்ணிலர்.

மெய்கண்டார் தமிழிற் றனிமுதனூலே இயற்றினரென்பதும், அதன் மொழிபெயர்ப்பே வடமொழிப் "போதம்" ஆகுமல்லது வடநூற்கது மொழிபெயர்ப்பாகாதென்பதும், புதிதாய் நானே புகலுவதன்று; முன்மூதறிஞர் சொன்னதுமுண்டு. சித்தியாருக்குரை வகுத்த வித்தகர் பலருள், முனிவர்மட்டுமே "மெய்கண்டதேவன் மொழிபெயர்த்தருளின" தாகக்கூற, அவருக்கு முந்திய மறைஞானதேசிகரும் சிவாக்கிரயோகியும் நிரம்ப அழகியரும் மெய்கண்டநூலை சுவேதவனப் பெருமாள் தாமே இயற்றிய முழுமுதநூலெனப் பாராட்டியுள்ளதும் ஆராயற்பாலது. அதை மொழிபெயர்ப்பென்ற பிற்றைக்கூற்றுக்கு இற்றைஞான்றுவரை எனைத்துச்சான்றும் எவரும் கூருமையும் கருதற்குரியது. (தொடரும்.)